**தலைப்பு 256 – கம்பஹா மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | கம்பஹா | (ஊ) | நீர்கொழும்பு | (ஓ) | தொம்பே |
| (ஆ) | மினுவாங்கொடை | (எ) | அத்தனகல்ல | (ஔ) | களனி |
| (இ) | திவுலபிட்டிய | (ஏ) | ஜா-எல | (க) | பியகம |
| (ஈ) | மீரிகம | (ஐ) | வத்தளை | | |
| (உ) | கடான | (ஒ) | மஹர | | |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

கம்பஹா மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூன் 24 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

கம்பஹா மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 770 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 748 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 22 மில்லியன் அதாவது 2.92 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | |
| மீண்டெழுபவை | 728,672,000 | 723,376,691 | 5,295,309 | 0.73 |
| மூலதனம் | 41,650,000 | 24,454,811 | 17,195,189 | 41.28 |
| மொத்தம் | **770,322,000** | **747,831,502** | **22,490,498** | 2.92 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 27 அமைச்சுக்களிலிருந்தும் 19 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 6,096 மில்லியன் தொகையும் ரூபா 3,163 மில்லியன் தொகையுமாக ரூபா 9,259 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிஏற்பாடுகளில் முறையே ரூபா 4,322 மில்லியன் தொகையும் ரூபா 3,069 மில்லியன் தொகையுமாக ரூபா 7,391 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் முறையே ரூபா 1,774 மில்லியன் தொகை மற்றும் ரூபா 94 மில்லியன் தொகையுமாக ரூபா 1,868 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.2 முற்பணக் கணக்குகள்

-----------------------------------

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

-------------------------------------------------------------------------------------------------

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

--------------------------------------------------------------------------------

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25601 | 72 | 51 | 53 | 53 | 245 | 229 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

------------------------------

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 307.29 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

### 2.4 பொது வைப்புக் கணக்குகள்

----------------------------------------------------

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதி ரூபா 618.11 மில்லியனாக இருந்தது.

### 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

-------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கம்பஹா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு

மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 256 – கம்பஹா மாவட்டச் செயலகம்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையிள் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| பொருட் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(1) | நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் களஞ்சியப் பொருட்கள் தொடர்பான இருப்புப் பதிவேடு 2014 ஏப்ரல் மாதம் முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டிற்குரியதாக கம்பஹா மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மஹர பிரதேச செயலகத்தினால் திறசர பிங்கு கம்மான செயற்திட்டத்தை 03 வருட காலத்தில் அமுல்படுத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக தனியார் நிறுவனத்திற்கு ரூபா 1,031,436 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் இறுதி அளவில் அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மஹர பிரதேச செயலகத்தினால் ரூபா 140,000 கிரயத்தில் 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 5 அதிவேக தையல் இயந்திரங்கள் 2014 ஆம் ஆண்டின் இறுதிவரையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மஹர பிரதேச செயலகத்தினால் ''ஒரு கிராமத்திற்கு ஒரு வேலையின்'' கீழ் கிரிகித்த மேற்கு மற்றும் எட்டிகெஹெல்கல்ல மேற்கு என்ற இரண்டு நீர் முன்மொழிவுத் திட்டங்களுக்காக முறையே ரூபா 892,436 மற்றும் ரூபா 834,308 தொகைகளாக ரூபா 1,726,744 கூட்டுத்தொகை 2012 ஆம் ஆண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்த்த பெபேறுகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) நீர்கொழும்பு பிரதேச செலயகத்தினால் அமுல்படுத்தப்பட்ட ‘‘வீட்டிற்கு வீடு கிராமத்திற்குக் கிராமம்’’ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்தும் 02 ஆவது நிபந்தனையின் பிரகாரம் அந்த செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 51,918,452 கூட்டுத்தொகையான 58 செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிற்கு தொடர்ச்சியான வேலையாக இருந்ததுடன் ரூபா 23,623,487 கூட்டுத்தொகையான 14 செயற்திட்டங்களுக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நீர்கொழும்பு பிரதேச செலயகத்தினால் 2014 ஆம் ஆண்டில் ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 18,076,073 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 1208 பொருட்கள் 2015 பெப்ரவரி மாத இறுதி வரையிலும் உரிய பயனாளிகளிற்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நீர்கொழும்பு பிரதேச செயலகத்தினாலும் ஜா-எல பிரதேச செயலகத்தினாலும் ஓய்வூதியம் பிழையாகக் கணிப்பீடு செய்யப்பட்டமையினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் முறையே ரூபா 1,014,396 மற்றும் ரூபா 3,511,281 தொகைகளாக ரூபா 4,525,677 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) மத்திய அரசாங்கத்தின் நிதி அடிப்படையில் திவுலபிட்டிய பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களின் 85 செயற்திட்ட முன்மொழிவுகளில் ரூபா 10,096,836 கூட்டுத்தொகையான 44 செயற்திட்டங்களுக்கு கட்டுநிதி கிடைக்காமை மற்றும் காலம் போதியளவாக காணப்படாமை காரணமாக கைவிடப்பட்டிருந்தன.

(ஏ) திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் மாவட்ட அபிவிருத்தி உத்தேசத்திட்டத்தின் கீழ் ரூபா 5,629,000 தொகையான 12 அபிவிருத்தி செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் பின்னர் அந்த செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன.

(ஐ) ‘‘கமநெகும’’ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 2,216,281 கூட்டுத்தொகையான 10 செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிற்கு நீடிக்கப்பட்டிருந்தது.

(ஒ) ஜா-எல பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட ‘‘வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம்’’ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் 2014 ஆம் ஆண்டில் வேலை முடிவடைந்த மற்றும் நடைமுறை செயற்திட்டங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 56,921,607 தொகையான பட்டியல்கள் 2015 மார்ச் மாதம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஜா-எல பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட ‘‘வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம்’’ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டிய ரூபா 45,250,000 தொகையான 47 செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிற்கு நீடிக்கப்பட்டிருந்தது.

(ஔ) ஜா-எல பிரதேச செயலகத்தினால் 3 சுயதொழில் பயிற்சிநெறிகளை நடாத்துவதற்காக ரூபா 1,350,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. உரிய பயிற்சி பெற்று சுயதொழில்களில் ஈடுபடுதல் தொடர்பாக பிரதேச செயலகத்தினால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) தொம்பே பிரதேச செயலகத்திற்குரிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 09 சுயதொழிலாளர்களுக்கு ரூபா 73,155 பெறுமதியான உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. 2015 யூன் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது 08 சுயதொழிலாளர்களினால் அந்த உபகரணங்களை உபயோகித்து உரிய தொழில்கள் ஆரம்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கா) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ‘‘வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம்’’ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொம்பே பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 12,039,629 தொகையான பல்வேறு பொருட்கள் மற்றும் 1760 உபகரணங்கள் என்பன 2015 யூன் 05 ஆந் திகதி வரையிலும் உரிய பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வருடங்களை விஞ்சிய (காணி வைப்புத் தவிர) ரூபா 12,863,332 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர்கொழும்பு பிரதேச செயலகத்தினால் உரிய பயனாளிகள் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்படாதிருந்த ரூபா 7,816,710 தொகையான காணி இழப்பீட்டுப் பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) 06 பிரதேச செயலகங்களுக்குரிய 10 வருடங்களை விஞ்சிய ரூபா 8,832,270 கூட்டுத்தெொகயான காணி வைப்புக்கள் தொடர்பாக தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(2) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

25601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 8 பிரதேச செயலகங்களில் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 20 உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,206,524 தொகையான மீதி நிலுவையாகக் காணப்பட்டது. அந்த உத்தியோகத்தர்களில் 13 பேர்களிடமிருந்து நிலுவையாக இருந்த ரூபா 1,264,437 தொகையான கடன் மீதி 1 வருடம் முதல் 18 ஆண்டுகள் வரையான காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 5 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 358,522 தொகையான கடன் மீதி 1 வருடம் முதல் 5 வருடங்கள் காலமாக அறவிடப்படாதிருந்தது.

(இ) பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 1 வருடம் முதல் 7 வருடங்கள் வரையிலான காலமாக ரூபா 405,776 தொகையான கடன் மீதி நிலுவையாகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத்திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் ஒரு தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மாவட்ட செயலகத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சொத்து வகை | சொத்துக்களின் எண்ணிக்கை/ அலகுகள் | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் |
|---|---|---|---|
| (i) | உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடம் | 01 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், உடுகம்பொல |
| (ii) | - மேற்படி - | 01 | சமூர்த்தி வங்கி, ஹொரம்பெல்ல |

(iii) மினுவான்கொடை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் உன்னாறுவையில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வீடொன்றில் அனுமதியற்று குடும்பமொன்றை குடியமர்த்தியமை.

**3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

---

**செயற்திட்டங்களின் நிறைவேற்றலிலுள்ள நலிவுகள்**

---

2013 ஒக்தோபர் 03 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் 13(ii) ஆம் பந்தியின் பிரகாரம், வத்தளை மற்றும் ஜா-எல பிரதேச செயலகங்கள் இரண்டையும் நிர்மாணிப்பதற்கான ஆரம்ப வேலைகள் 2014 ஆம் ஆண்டின் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி ஆரம்பிக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் அந்த நிர்மாணங்களிற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 28,000,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 61 சதவீதத்திற்குச் சமமான ரூபா 17,097,320 தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

---

2007 யூன் 28 ஆந் திகதிய 1/8/18 ஆம் இலக்க கம்பஹா மாவட்டச் செயலாளரின் கடிதத்தின் படி பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களும் வருடமொன்றிற்கு நான்கு தடவைகள் பிரதேச செயலாளரினால் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் படி உரிய பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்**

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 46 | 39 | 7 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 22 | 8 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 2,060 | 1,939 | 121 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 106 | 103 | 5 | 2 |
| | மொத்தம் | 2,242 | 2,103 | 141 | 2 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் மாவட்ட செயலகம் 141 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது.